# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
# குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 31–01–2017 ம் தேதி செவ்வாய் கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானங்கள்**

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சியில் பராமரிக்கப்படும் கட்டடங்களின் மேற்கூரையில் சூரிய மின்சக்தி ஆலைகள் அமைத்திட சாத்திய கூறுகளை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் வாய்ப்புள்ள கட்டடங்கள் மீது சூரிய மின்சக்தி ஆலைகள் மின்உற்பத்தி செய்யும் திட்டம் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி உரிய கலந்தாலோசகரை நியமித்து ஒப்பந்த படிவம் தயாரித்திடவும் மற்றும் ஒப்பந்த செயல்முறை மேலாண்மை செய்திட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புர உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு உரிய நிர்வாக அனுமதி பெற்று பணியினை செயல்படுத்திட மன்றம் தீர்மானிக்கிறது.

மேற்படி, சூரிய மின்சக்தி ஆலைகள் அமைத்து மின் உற்பத்தி செய்யும் திட்டத்திற்கு 100 விழுக்காடு முதலீடு செய்திடவும், இந்த முதலீட்டு தொகையினை, மின் உற்பத்தி மூலம் ஈட்டிட தேவைப்படும் காலம் வரை சூரிய மின்சக்தி ஆலைகளை இயக்கி பராமரித்தல் உட்பட அனைத்து தொடர்பு வேலைகளையும் செய்திடவும், முன்வரும் புதுப்பிப்பு மின் திறன் சேமிப்பு நிறுவனங்கள் / முதலீட்டாளர்கள்/ ஒப்பந்தபுள்ளி போட்டியாளர்களை வரவேற்று பணி செயலாக்கம் செய்திட மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2798,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 2

செய்தி மக்கள் தொடர்பு துறை உதவி அலுவலர் அவர்களின் 23–01–2017–ம் நாளய தொலைபேசி செய்தியில் தமிழரசு நாளிதழ் மாதச்சந்தா தொகை ரூ.240/– வீதம் ஆண்டொன்றுக்கு ரூ.2880/– துணை இயக்குநர் (வெளியீடு) சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகை அனுப்பி வைக்கவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2799,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சி பகுதிகளில் குப்பை சேகரம் செய்ய வைக்கப்பட்டுள்ள 9 குப்பைத் தொட்டிகள் (Dumber Bins) மிகவும் மோசமான நிலையில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், நகரின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு தற்போது 7 எண்ணம் குப்பைத் தொட்டிகள் வாஙகவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.4,20,000/–ஐ வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2800,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 4

தூய்மை பாரத இயக்கம் 2015–2016 சிறப்பு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட உரக்கிடஙகி Compost Plat form அமைக்கும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. மழைக்காலஙகளில் உரக்கிடஙகின் மேட்டுப்பகுதியிலிருந்து வரும் மழைநீர் Compost Plat form அருகில் தேஙகி நிற்பதால் சுகாதார கேடு மற்றும் நோய்கள் பரவும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே சுகாதார நலனை கருத்தில் கொண்டு மழைநீர் தேஙகாமலிருக்க மழைநீர் வடிகால் அமைக்கவும், Compost Plat form–க்கு செல்வதற்கு ஏதுவாக சிறுபாலம் (Culvert) அமைக்கவும் உத்தேச மதிப்பீடு ரூ.4.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கு அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2801,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சியில் 2014–2015–ம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கை, ஆண்டுக் கணக்குகள் மற்றும் 30–09–2016–ம் தணிக்கைத் தடை நிலுவை அறிக்கை தயாரித்து வழஙகிய வகையில் Aurotec, Arumanai அவர்களது பில்தொகை ரூ.12,922/– வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.
ந.க.எண்.3288/2016/பி1.

**நகர்மன்றத் தீர்மான எண். 2802,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 6

குழித்துறை நகராட்சியில் 2013–2014 மற்றும் 2014–2015–ம் வருடத்திற்குரிய Income Tax Return தாக்கல் செய்த வகைக்கு 2013–2014 மற்றும் 2014–2015–க்குரிய கட்டணம் ரூ.6000/– மேற்படி Jocob and Jocob, Marthandam அவர்களுக்கு வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2803,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சி அலுவலக கணனி மையத்திலுள்ள சர்வர் அடிக்கடி பழுதடைவதால் அலுவலக பணிகள் பாதிப்படைகிறது. மேற்படி சர்வர் warrenty காலம் **28–08–2016–**ம் முடிவடைந்துள்ளது. மேலும் சர்வரில் உள்ள RAM பழுதடைந்துள்ளதால் புதிதாக RAM வாஙகுவதற்கு இரண்டு எண்ணம் HP Laser Jet Printer பழுதுகள் சரி செய்யவும் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| | | |
|---|---|---|
| 1) | M/S. Micronet System,<br>Ist Floor, Kartha complex,<br>Thuckalay. | Rs. 19600/- |
| 2) | M/S. Hitech Systems,<br>14-21/3 Ramanparambu road,<br>Thuckalay. | Rs. 21,200/- |
| 3) | M/S. Microtuf Computers<br>Winson Plaza,<br>Karungal. | Rs. 21,900/- |

அ) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் M/S. Micronet System தக்கலை நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்க மன்றம் தீர்மானிக்கிறது.

அ) அவசர அவசியம் மற்றும் அலுவலக நலன் கருதி விலைப்புள்ளி பெற்றமைக்கும் மன்றம் அனுமதி வழஙக தீர்மானிக்கிறது.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2804,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சி அலுவலக Muratec Xerox இயந்திரத்தில் ஏற்படும் பழுதுகளை வருடாந்திர பராமரிப்பு செய்வதற்கு ரூ.**6500/–**க்கு நகர்மன்ற தீர்மானம் எண்.**2752**, நாள் **1–9–2016**ன் படி மன்ற அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கம் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) | M/S. SGS Infotec Pvt Ltd.,<br>Nagercoil. | Rs. 6,500/- |
| 2) | M/S. Lap tech System,<br>Nagercoil | Rs. 8,500/- |

3) M/S. Supreme System Rs. 8,000/-
Chettikulam,
Nagercoil.

அ) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–ல் M/S. SGS Infotec Pvt HLtd. நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்க மன்றம் தீர்மானிக்கிறது.

அ) வேலை உத்தரவு வழஙகும் நாளிலிருந்து ஒருவருட காலத்திற்கு பராமரிப்பு செய்யவும் மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2805,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 9

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட இடவிளாகம் ஜஙசன் முதல் சாணான்விளை வரையுள்ள சாலை செப்பனிடும் பணி ரூ.4,20,000/– மதிப்பீட்டில் 26.60% குறைவான விலை நிரக்கில் பணி செய்ய வேலை உத்தரவு வழஙகப்பட்டு ரூ.2,04,422/–க்கு பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது, மதிப்பீட்டுத் தொகையில் மீதமுள்ள தொகை ரூ.2,15,578/–ல் இடைவிளாகம் சாலையின் அருகில் செல்லும் சாலை பழுதடைந்துள்ளதால் பொது மக்கள் மற்றும் போக்குவரத்து நலன் கருதி மதிப்பீட்டு தொகைக்குள்ளாக 26.60% குறைவான விலை நிரக்கில் அதே ஒப்பந்ததாரர் மூலம் பணி செய்வதற்கு மன்றம் தீர்மானிக்கிறது

**நகர்மன்றத் தீர்மான எண். 2806,**

**அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண். 10

தூய்மை இந்தியா இயக்கம் 2016–2017–ன்கீழ், குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 அழிஞான்விளை குழிக்கடவு பகுதியில் ரூ.4.20 லட்சம் மதிப்பீட்டில் கழிப்பிடம் கட்டுவதற்கு பணி உத்தரவு வழஙகப்பட்டது. மேற்படி பணிக்காக அஸ்திவாரம் தோண்டும் பணி நடைபெறும் போது, பொதுப்பணித்துறையின் மூலம் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே தடுப்பாணை கட்டப்பட்டு வருவதால் நீர்பிடிப்பு பகுதியில் நீர் ஏறுவதற்கு வாய்புள்ளது எனவும் அப்பகுதியில் கழிப்பிடம் கட்டப்படுவதால் குடிநிர் விநியோகிக்க பயன்படுத்தப்படும் கிணறுகளில் கழிவுநீர் கலந்து சுகாதாரகேடு ஏற்பட்டுவிடும் எனவும் கழிப்பிடம் கட்டுவதை தடுத்து நிறுத்தினர். மேற்படி திட்டம் பாரதபிரதமரின் தூய்மை இந்தியா இயக்கம் திட்டம் என்பதால் பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 பெண்டுகடவு பகுதியில் ஏற்கனவே பணி உத்தரவு வழஙகப்பட்ட ஒப்பந்ததாரர் மூலம் அதே மதிப்பீட்டு தொகையில் அதே ஒப்பந்தப்புள்ளி விலை நிரக்கில் கழிப்பிடம் கட்டுவதற்கு மன்றம் தீர்மானிக்கிறது.

**நகர்மன்றத் தீர்மான எண். 2807,**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 11</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் அமைந்துள்ள மீன்சந்தையினை நவீன மீன்சந்தையாக மாற்றி அமைக்கும் பணி ரூ.129.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3230/2016/E3, நாள் 25–11–2016–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு Structural Design பெறப்பட்டு தொழில்நுட்ப அனுமதி பெறும் வகையில் Autocad Drawing- plan, Section Elevation, Site plan உட்பட விரிவான திட்ட அறிக்கை Detail Drawing & Estimate (DPR) 4 எண்ணம் தயார் செய்து அதற்கான தொழில் நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி Bid Document தயார் செய்து தருவதற்கு தொழில் நுட்ப ஆலோசகர் (Technical Consultant) நியமனம் செய்யப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க உத்தேச செலவினம் ரூ.2,20,000/–ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை செய்வதற்கும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றம் தீர்மானிக்கிறது.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2808,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 12</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2–ல் வள்ளிக்கோட்டுக்குளம் முதல் அம்பலத்துவிளை வரை சாலை அமைக்கும்பணி ரூ.4,35,000/– மதிப்பீட்டில் 47.16 சதவீதம் குறைந்த விகிதத்தில் பணி செய்ய வேலைஉத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டு ரூ. 237775/–ற்கான பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்குரிய மதிப்பீட்டுத் தொகையில் ரூ. 1,97,225/– மீதம் உள்ளது. எனவே மேறகண்ட வார்டில் வள்ளிக்கோட்டுக்குளம் அருகில் கலையன்குளம் சாலை மிகவும் மோசமாக பழுதடைந்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் போக்குவரத்து நலன்கருதி மீதமுள்ள தொகை ரூ.197225/–க்கு மதிப்பீட்டு தொகைக்குள்ளாகவே அதே ஒப்பந்த விலைநிரக்கில் அதே ஒப்பந்ததாரர் மூலம் பணி செய்வதற்கு மன்றம் தீர்மானிக்கிறது.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2809,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவோர வியாபாரிகளின் கணக்கெடுக்கும் பணிக்கு கீழ்கண்டவாறு மூன்று விலைபட்டியல் 03–01–2017–ல் வரப்பட்டுள்ளது.

| Sl. No. | Name of the Organsiation | Description | Rate per Vender |
|---|---|---|---|
| 1 | Sri Managadu Kamatchiamman Business Corporation Chennai | a) i) Street Vendor survey<br>ii) GIS Mapping<br>iii) Data analysis, Data Tagging reports with Maps | Rs. 122.00 (Encluding of service Tax 15% |
| | | b) i) Street Vendor’s Enumeration<br>ii) Bio-metric data capturing | Rs. 190.00 (Encluding of |

| | | | |
|---|---|---|---|
| | | iii) Issue of Identify card<br>iv) Data base maintenance for one year | service Tax 15% |
| 2 | Elito people<br>Chennai | a) Street Vendor Survey and report | Rs.155.00 |
| | | b) Bio-metric data capturing issue of Identify card and Data base maintenance for one year | Rs.240.00 |
| 3 | ARC Engineering Associals<br>Chennai | Street Vendor Survey, GIS Mapping and reports | Rs.150.00 |
| | | Bio-metric data capturing, issue of Identify card and Data base maintenance for one year | Rs.230.00 |

1) குறைந்த விலை பட்டியல் கொடுத்த சென்னை ஸ்ரீ மாஙகாடு காமாட்சியம்மன் பிசினஸ் கண்டுள்ளதாலும் நிறுவனத்திற்கு வழஙக மன்றம் தீர்மானிக்கிறது.

2) பொருளில் கண்ட பணியை மேற்கொள்ள ஆகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிட மன்றம் தீர்மானிக்கிறது. (ந.க.எண்.159/2017/SO)

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2810,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

<u>பொருள் எண். 14</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN.75L0828ன் Battery பழுதடைந்து வாகனம் இயக்க முடியாமல் உள்ளது. மேற்படி ஈப்பின் அவசர அவசியம் கருதி St. John's Auto Electricals நிறுவனம் மூலம் புதிய Battery வாஙகுவதற்கும் Head light Bulb மற்றும் Head Light relay பொருத்துவதற்கும் ரூ.7430/– வருவாய் நிதியில் செலவிட மன்றம் தீர்மானிக்கிறது.

**<u>நகர்மன்றத் தீர்மான எண். 2811,</u>**

**அனுமதிக்கப்பட்டது**

ஒப்பம்/–
தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர் பொறுப்பு,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்(பொ),
குழித்துறை நகராட்சி.